# பாரதிதாசன் கவிதைகளில் பொது வாழ்வில் பெண்மை

**இ.கிறிஸ்டியா**
*ஆய்வில் நிறைஞர் பட்ட மாணவி தமிழ்த்துறை*
*பிரிஸ்ட் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்*

**முனைவர். இரா. சசிகலா**
*தமிழ்த் துறை தலைவர்*
*பிரிஸ்ட் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்*

மனித இனம் இயங்குவதற்குச் சில சமூக நிறுவனங்களின்பங்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. அந்த நிறுவனங்களைஆதாரத் தூண்களாகக் கொண்டு சமுதாயம் என்ற கட்டிடம் இயங்கி வருகிறது. குடும்பம், சமயம், அரசு, கல்வி, பொருளாதாரம் ஆகியவை முதன்மையானதாகும். இவற்றுள் மிகவும் அடிப்படை ஆதாரமாகக் கருதப்படுவது குடும்பமேயாகும். இது மற்றநிறுவனங்களுடன் ஒத்துழைத்துத் தன் பங்கை நிறைவேற்றுகிறது. பெண்கள், குடும்பம், என்கிற நிறுவனத்தை ஏற்று நடத்துவது மட்டுமில்லாது: பிற துறைகளில் பங்கேற்று பொது வாழ்விலும் பங்குபெறுகின்றனர் என்பதை எடுத்துரைப்பது இவ்வியலின் அவசியமாகின்றது.

### பெண்ணும் பொதுவாழ்வும்

பெண்கள் இல்லறத்தில் ஈடுபட்டுத் தன் குடும்ப பணிகளை ஆற்றுால் வீட்டு வாழ்வாகும். தன் குடும்பம்தவிர்த்துப் பிறருக்கோ, ஊருக்கோ, சமுதாயத்திற்கோ, நாட்டுக்கோ ஆற்றும் பணிகளைப் பொதுப்பணிகள்,பொதுச்சேவைகள், பொதுத் தொண்டுகள் என்று அழைக்கிறோம். பொது வாழ்வின் அடிப்படை பிறர் நலம் காண்பது. பெண்ணின் அன்பு குடும்பத்தில் வளர்கிறது. மனித நேயச் சமூக பணிகளில் அன்பு அருளாக மலர்கிறது. பிறர்மகிழ்ச்சி பொதுவாழ்வில் பயனாகும். பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றி அதனைக் களைதல் அருளறமாகும். பொது வாழ்வில் தன்னலம் தோய்த்து பிறர்நலம் வளர்கிறது. பெண் வீட்டை வீட்டு வெளியே சென்று தொண்டு புரிதல் வேண்டும். அதனால் இல்லறத்தைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லை.

ஓய்வானநேரங்களில் ஒப்புரவு பேணித் தொண்டு செய்யவேண்டுமெனப் பா.தா., பொது பணிகளில் ஈடுபடும் பெண்களைப் படைத்து அவர்களுக்குப் பல்வகைப் பொறுப்புகளையும் அமைத்துக் கொடுக்கிறார்.மனித நேயம் பொதுத்தொண்டின் மையமாக விளங்குகிறது. தன்னலம் போற்றாமல் பிறர் நலம் போற்றிச் செய்யும் பணிகள் எல்லாம் தொண்டாகும். தொண்டுகள் பலவகைப்படும் சமூகத்தொண்டு, நாட்டுத் தொண்டு, அரசியல் தொண்டு, பொருளாதாரத் தொண்டு, சமயத்தொண்டு, மருத்துவத் தொண்டு, என வேறுபடுத்தப்படுகின்றன.

ஊதியம் கருதாமல் உடலாலும் பொருளாலும் தொண்டு புரியக் கூடியவள்தான் பெண் என்பவள்.

### பெண்களின் அலுவல் மாற்றம்

தொழில் மயமாக்கத்தினால் வீட்டிற்குள்ளேயே தாயாரிக்கப்பட்டு வந்த அடிப்படைப் பொருட்கள் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டன. இதனால் பாரம்பரியமாக தோய்வுற்றன. குடும்பத்தின் உறுப்பினர்கள் வெளியில் சென்று பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வீடு, வீட்டை சுற்றிய வாழ்க்கை என்ற நிலையாகியது.

வீட்டு வேலைகளை எளிதாக்கும் கருவிகள் தோன்றியமையால் பெண்களுக்கு ஓய்வு நேரம் கிட்டியது. இதனால் ஆண்கள் வீட்டிற்கு வெளியிலும், பெண்கள் வீட்டிற்கு உள்ளும் என்ற வரையறை மாறிப்பெண்களும் வெளியிடங்களில் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

### பெண்கள் மேற்கொள்ளத்தக்க பொதுப்பணிகள்

பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு மேற்கொள்ளத்தக்க பணிகள் மிகப்பலவாகும். ஆண்களுக்குச் சமமாக எந்தப் பணியையும், பெண்கள் மேற்கொள்ளலாம் என்பது பா.தா. கருத்தாகும் . வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் உலகிற்கும், நாட்டுக்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றப் பெண்கள் முன் வரலாம், தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டுப் பிறர் இன்புறத்தாம் இன்புறமுடியும்.

எனினும் பா.தா.கருத்து நோக்கில் 1. கல்வித் தொண்டு, 2. அரசியல் தொண்டு, 3. பெண்கள் முன்னேற்ற பணிகள். 4.சமூகபணிகள். 5.மொழிபற்று, 6.நாட்டுப்பற்று, 7.பாட்டாளிகள்

அமைப்பு போன்ற பணிகளில் ஈடுபடும் பெண்மையைச்சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

**கல்வித்தொண்டு**

பெண்கள் கல்விப் பணியில் ஈடுபடுவது மிகச்சிறப்பாகும். பெண்களின் அன்பு , பொறுமை ஆகிய பண்புகள் கல்விப் பணிக்கு ஏற்றனவாகும். மேலும் பெண்களின் மென்மைக்கும் தாய்மைக்கும் பொருத்தமானப்பணி கல்விப் பணியாகும். தாய் தன் குழந்தைகளின் முதல் ஆசிரியை ஆவாள்.

பெண்களின் கல்விப் பணியென்பது கற்பிக்கும் பணி மட்டும் அன்று கல்வியில் சிறந்த பெண்கள் நூல்கள் எழுதுவது. இலக்கியம் படைப்பது. சொற்பொழிவுகள் ஆற்றுவது.

கல்வி நிறுவனங்கள் அமைப்பது, கல்வி வளர்க்க இயன்ற வகையில் (பொருளுதவி, உடலுதவி, சொல்லுதவி ) பாடுபடுவது. போன்ற பலவகைப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தினைக்கவிஞர் முன்வைக்கிறார்.

குடும்ப விளக்கில் தாய்தான் வாத்திச்சி என்கிறார். புரட்சி கவியில் இலக்கணம் கற்று இலக்கியம் படைக்க விரும்பும் அமுதவல்லியையும், 'வீரத்தாய்' காவியத்தில் சகல கலைகளையும் கற்றுத்தரும் தாயையும் படைத்த பெண்களைக் கல்வி பணிபுரியுமாறு அழைக்கிறார்.

**பெண்கள் முன்னேற்றத்திற்கான தொண்டு**

நம் சமூகத்தில் பெண்உரிமைகளைப் பெறுவதற்குப் பெண்கள் ஒன்று கூடித் தங்களுக்குத் தேவையான உரிமைகளை வகுத்துக் கொண்டனர் சமுதாயத்தின் மீது ஆர்வம் கொண்டு பெண்ணினம் மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்தனர்.

ஆண் குடும்பத்துக்கு வெளியே சென்று பொருளீட்டும் பொறுப்பில் உள்ளவன். எனவே அவனுக்கு அதற்குகந்த தொழிற்கல்வி, பிறமொழிப் பயிற்சி, அனைத்தும் தேவை.

பெண் குடும்பத்தில் இருப்பவள் அவளுக்கு எளிமை, சிக்கனம் என்ற பண்புகளுடன் குடும்பத்தை செவ்வனே நடத்தி செல்லவும் குழந்தைகளை நன்கு வளர்ப்பதற்குமான கல்விப் பயிற்சியே போதும்,. பெண்களிடம் இயல்பாக அமைந்துள்ள பொறுமை, உறுதி, தியாகம் ஆகியவையே தேசிய போராட்டத்துக்கு என்ற கருத்துரைக்கிறார்.

இக்கூற்றிலிருந்து பெண்களுக்கான இயல்பான குணங்கள் இருந்தால் போதுமானது என்ற காந்தியடிகளின் கருத்து. இச்சமூகத்தில் பெண்ணுரிமைக் கோரும் பெண்களுக்கு எதிரானதாக அமைகின்றது.

பா.தா. நோக்கில் அரசியல், விடுதலை பெண்கள் முன்னேற்றம், சமூக மேம்பாடு ஆகியன சிறந்த பணிகளாக விளங்குகின்றன. பெண்கள் முன்னேற்றப் பணிகள் பலவாகவுள்ளன. பெண் விடுதலை, கல்வியறிவு, விதவை மறுமணம், மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற சமூகச் சீர்த்திருத்தங்கள் ஆணாதிக்க எதிர்ப்பு போன்ற பிறவும் பெண்கள் முன்னேற்றப் பணிகளில் மேற்கொள்ளத் தக்கனவாகும், இப்பணிகளில் பெண்கள் ஈடுபட வேண்டும்.

பெண்கள் தம்முடைய பிரச்சனைகளுக்குத் தாமே போராட வேண்டும் என்பது பல அறிஞர்கள் கருத்தாகும். பெண்கள் தம்மைத் தாமே மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை.

பெண்களுக்குக் கல்வியறிவை மட்டும் வேண்டும்; பிறகு

**பெண்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு வழிதேடிக் கொள்வார்கள் 12**

என்ற விவேகானந்தரின் சொற்களைப் பாரதி மேற்கொள் காட்டுகிறார். பெண்களின் அமைதியையும், புரட்சியையும் எடுத்துரைக்கக் கடலையும் அலையையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

**புரட்சிக்கப்பால் அமைதி**
**பொலியுமாம் அதுபோல் ஓரக்**
**கரையினில் அலைகள் மோதிக்**
**கலகங்கள் விளைவிக்கும்; ஆனால்**
**அங்குள்ள அலைகட்கப்பால்**
**கடலிடை அமைதி அன்றோ13**

என்று விளக்கம் தருகிறார்.

பா.தா.னால் படைக்கப்பட்ட பெண்பாத்திரங்கள் ,சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அது மேம்படுவதற்காகப் பாடுபடும் அரிய பெண்களாக அமைந்திருக்கின்றனர்.

**சமூகத் தொண்டு**

பெண்கள் சமூகத்தொண்டு புரிய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. மருத்துவத் துறையிலும், கல்வித் துறையிலும், சமூக நலப் பணிகளிரும் மற்றும் பிறதுறைகளிலும் பணிகளை மேற்கொண்டு சிறப்பாக சமூகத்தில் நலிந்த பிரிவினருக்குத் தொண்டுசெய்தனர். கொள்ளை, நோய்கள், பஞ்சம், இயற்கைச் சீற்றத்தால் உண்டாகும் மழை, வெள்ளம், புயல் , வறட்சி போன்ற காலகட்டத்திலும், அறியாமை, மூட நம்பிக்கையுடையோர்களின் துயர் துடைக்கும் பணிகளைச் செய்து வந்தனர்.

அன்னை தெரசா சமூகத் தொண்டினால் புகழ்பெற்றவர். அளவற்ற கருணை, எல்லையில்லா அன்பு, ஆதரவற்றவர்கள் அத்தனை பேரையும் நேசிக்கும் மனப்பாங்கு

ஆகியவை இருந்தால்தான் ஒட்டுமொத்த மானுட குலத்துக்கும் அன்னையாக அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

**'தொழுதெழுவாள்' கவிதையில்,**
**நிலந்தொழேன்! நீர்தொ ழேன்!**
**வளிதொழேன் ! எரிதொழேன்**
**அலங்கல்சேர் மார்பன் எந்தன்**
**அன்பனைத் தொழுவதன்றி 14**

என்று மூடநம்பிக்கையை அகற்றி, நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமேனக் கருதினால்.

குடிமக்க, அரசியாரை பார்த்து 'ஒழிந்தது வறுமை!' அன்பினால் உதவுக!' என்று தங்கள் வறுமை நீக்க வேண்டியவர்களின்பொருட்டு

**பிழைத்தது மழைஅத்தான் பெய்!15**

என்று கேட்டுக்கொண்டாள் மன்னன் செந்நெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்திட ஆணை வழங்கினான்.மனைவியின் தூய அன்பிற்குக் கட்டுப்பட்டவன் அவள் உரையை ஏற்று உதவினான். மக்களும் பசித்துன்பம் நீங்கி மகிழ்வுற்றனர்.